தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. வேட்பாளர்

சேது செல்வத்தை ஆதரித்து தி.மு.க. - கூட்டணி கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்டப் பிரச்சாரம்!



புதுச்சேரி, அக். 4- தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா ஆகியோர் தலைமையில் தி.மு.க., கூட்டணிக் கட்சித் தலைவர்கள் 31 பூத்துகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பிரச்சாரம் நாளை மாலை 5.00 மணியுடன் முடிவடைய உள்ளதால், நேற்று மாலை பொய்யாக்குளம் பகுதியில் தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அப்போது தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு வீடு, வீடாகச் சென்றனர். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர்கள் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் பேசிய தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., திமுக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி ஆகியோர் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திராவிடர் கழகம், தே.மு.தி.க., மக்கள் நீதி மய்யம், எஸ்டிபிஐ உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு பெற்ற மக்கள் தொண்டன் சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள். சேது செல்வம் வெற்றி பெற்றால் தட்டாஞ்சாவடி தொகுதி மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வார். 20 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ள தட்டாஞ்சாவடி தொகுதியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வார். மக்களுக்காக பலமுறை சிறை சென்ற சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அதிகபடியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுங்கள். இவ்வாறு பேசினார்கள்.

வாக்கு சேகரிப்பின் போது, எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.எச். நாஜிம், விழுப்புரம் மாவட்டச் செயலாளர்கள் மருத்துவர் ஆ.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மருத்துவர் பொன்.கௌதமசிகாமணி, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.செந்தில்குமார், அ.செந்தில் (எ) ரமேஷ், தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ரோ.நித்திஷ் மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் திருக்கோவிலூர் தங்கம், முகையூர் வடக்கு ரவிச்சந்திரன், தெற்கு லூயிஸ், ராஜ்பவன் தொகுதி செயலாளர் மோகன், தொண்டர் அணி அமைப்பாளர் வீரய்யன், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில்முருகன், தொகுதி அவைத்தலைவர் கணேசன், அஜய்பரத், அயலக அணி சிவா, முன்னாள் இளைஞர் அணி ராஜ், ஐடி விங் சிவதாசன் உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாக்கு சேகரித்தனர்.

வணிகர்கள் நாம் நன்றி உணர்வுடன் துணை நிற்போம்!

மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்!

வணிகர்களுக்கு தி.மு.க. வர்த்தகர் அணி சேப்பாக்கம் வி.பி. மணி வேண்டுகோள்!



சென்னை, அக்.4- வணிகர்களுக்கு வரிச்சலுகைகளையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, வணிகர்களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து பாதுகாத்தவர் "திராவிட மாடல் நாயகர்" முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்திட..! இடைத்தேர்தல் பெருவெற்றிக்கு எடை போடத் தெரிந்த வணிகர்கள் நாம் நன்றி உணர்வுடன் துணை நிற்போம் என்று கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சேப் பாக்கம் வி.பி. மணி தெரிவத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நடைபெற உள்ள மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வணிக வள்ளல்களுக்கு பணிவான வணக்கம்.!!

மேற்கண்ட தொகுதிகளில் வரும் 6 ஆம் தேதி சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த இடைத்தேர்தலில் அரசு இயங்க அச்சாணிகளாய் விளங்கும் வணிகப் பெருமக்களுக்கு வரிச் சலுகைகளையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, வணிகர் நல வாரியம் அமைத்துத் தந்து, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வணிகர்களை அழைத்துப் பேசி, அதன் அடிப்படையில் பட்ஜெட்டில் பல்வேறு வாரிச் சலுகைகளை அளித்து, முத்தாய்ப்பாக குடும்ப நலநிதி உதவித்தொகை 5 லட்சமாக உயர்த்தி வழங்கி, வணிகர்களை தொடர்ந்து பாதுகாத்து வருபவர் "வணிகர்களின் பாதுகாவலர்கள்" தலைவர் கலைஞர் அவர்களும், இன்றைய "திராவிட மாடல் நாயகர்" முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ஆவார்கள் என்பதை இத்தருணத்தில் நாங்கள் நன்றி உணர்வுடன் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.!!

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் தனது ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லாத த.வெ.க அரசு தற்பொழுது கொல்லைப் புற வாசல் வழியாக அ.தி.மு.க. சட்டமன்ற சில உறுப்பினர்களை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விலைக்கு வாங்கி, அவர்களை குறுகிய நாட்களில் ராஜினாமா செய்ய வைத்து, தனது கட்சியில் இணைத்து செயற்கை முறையில் இடைத்தேர்தலை உருவாக்கி, அதிலும் குறிப்பாக இன்று வணிகர்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுவதற்கு முழுமையான காரணமாக இருப்பவர் தான் இன்றைய முதல்வர் நடிகர் விஜய் அவர்கள்.

தமிழ்நாட்டில் செயற்கை முறையில் நடைபெறும் இந்த இடைத்தேர்தல்கள் இனிமேலும் தொடராமல் இருக்க...

எடை போடத் தெரிந்த "வாக்காள வணிக வள்ளல்கள்" தாங்கள் வாக்குகளை நன்றி உணர்வுடன் உதயசூரியன் சின்னத்திற்கு குடும்பத்துடன் வாக்களிப்பது டன், உங்கள் வாடிக்கையாளர்களாகிய பொதுமக்களிடத்திலும் தி.மு.கழக அரசு தனது பொற்கால ஆட்சிக் காலத்தில் மக்களுக்கும் வணிகர்களுக்கும் கடந்த காலங்களில் செய்த சரித்திர சாதனைகளை வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் மறவாமல் மக்களிடம் எடுத்துக் கூறி,

அதிலும் முக்கியமாக இன்றைய அத்தியாவாசிய பொருள்களின் கடும் விலை வாசி உயர்வுக்கு பெரிதும் காரணமாக உள்ள சிறிதும் நிர்வாக திறமையற்ற நடிகர் விஜய் அரசின் தொடர் தவறுகளையும் இத்தருணத்தில் மறவாமல் மக்களிடம் சுட்டிக்காட்டி,

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் கழக வேட்பாளர்கள் இ. பரந்தாமன் மற்றும் எஸ். சுகன்யா ஆகியோர்களின் பெருவெற்றிக்கு, எடைபோடத் தெரிந்த வணிகர்கள் பெரிதும் துணை நிற்குமாறும் மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் இடை தேர்தலில் மாமல்லபுரம் நகரம் மற்றும் திருப்போரூர் தெற்கு ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட வீராணம் குன்னம் ஊராட்சி பூத் எண் 89 கீழ்ப்பட்டு பகுதியில் நகரச் செயலாளர் வெ.விஸ்வநாதன் மற்றும் ஒன்றிய செயலாளர் எம்.சேகர் தலைமையில் வாக்கு சேகரிக்கப்பட்டது. உடன் திருப்போரூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் கே. ரவிக்குமார், ஒ.ஜெ.மதுரைவேல், ஏ.மோகன், எம்.ஜெயராமன், கே.பழனி, மாமல்லபுரம் நகர நிர்வாகிகள் மோகன்குமார் விஸ்வநாதன் எம்.சி., சி.லோகேந்திரன், எம்.ரமேஷ் மற்றும் வீராணம்குன்னம் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்

அக்டோபர் 4 (2014)



வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.

தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(02.10.2026 - 3.10.2026)

1. ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே விடுதலைச் சிறுத்தை கட்சி நிர்வாகி ஓட ஓட விரட்டி வெட்டிக்கொலை ....



2. புதுக்கோட்டை இந்திரா நகரில் ஆறு மாத கர்ப்பிணி பெண் கொடூர கொலை .....

3. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே அசாம் மாநில தொழிலாளி கழுத்தை அறுத்து படுகொலை ...

4. தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மாயமான மூதாட்டி எரிந்த நிலையில் பிணமாக மீட்பு ...

5. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து கஞ்சா வழக்கில் சிக்கிய கைதி தப்பி ஓட்டம்...



6. செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகே, வீட்டில் தனியாக இருந்த பெண்ணின் கழுத்தை நெறித்து நகைகளை கொள்ளையடிக்க முயற்சி...

7. காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே தன்னை பிடிக்க வந்த போலீசாரை வெட்டி விட்டு தப்ப முயன்ற ரவுடி சுட்டு பிடிப்பு...

8. சென்னை நம்மாழ்வார் பேட்டையில் இளம் பெண்ணிடம் சில்மிஷம் செய்த ஜிம் மாஸ்டர் சிக்கினார் ...

9. சென்னை வேளச்சேரியில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணை கத்தி முனையில் மிரட்டி கொள்ளை முயற்சி ....



10. செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அருகே ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டு பூட்டை உடைத்து தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் திருட்டு ...

11. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கையில் கத்தியுடன் சுற்றி பொதுமக்களை அச்சுறுத்திய வாலிபர் சிக்கினார்...

12. தஞ்சையில் அம்மன் கோவிலில் அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருட்டு ...

13. விழுப்புரம் மாவட்டம் கோட்டக்கரை கிராமத்தில் அடுத்தடுத்த கோவில்களில் சாமி சிலைகள் திருட்டு ...



14. விழுப்புரம் மாவட்டம் வளவனூர் அருகே அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே மோதல், இரண்டு பேர் படுகாயம் ...

15. நெல்லை பாளையங்கோட்டையில் ஹோட்டலில் தகராறு செய்தவர்களை தட்டிக்கேட்ட ஓட்டல் ஊழியரை வழிமறித்து சரமாரியாக தாக்குதல் நடத்திய கும்பல் ...

16. சென்னை, பெரம்பூர், கூடுவாஞ்சேரி, தாம்பரம், வியாசர்பாடி அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா தாராள புழக்கம் ...

17. சென்னை கிழக்கு கடற்கரை சாலை அக்கரையில் பிரபல உணவகத்தில் 15 செல்போன்கள் திருட்டு ...

தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

காளிபாளையம் ஊராட்சியில் பி.எச்.பி.மனோஜ்பாண்டியன் எம்.எல்.ஏ. தெருமுனைப் பிரச்சாரம்!

தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாடு!



தாராபுரம், அக். 4- தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை ஆதரித்து தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாட்டில் காளிபாளையம் ஊராட்சியில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது.

இந்தப் பிரச்சாரத்தை ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பி.எச்.பி.மனோஜ் பாண்டியன் துவக்கி வைத்து வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு வீடுகளிலும் உதயசூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டியும், துண்டுப் பிரசுரங்களை வழங்கியும் வாக்காளர்களிடம் வாக்குகள் சேகரித்தார்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தங்கள் வாக்குகளை உதயசூரியன் சின்னத்திற்குத் தான் அளிப்போம் என்று வாக்கு சேகரித்த கழக நிர்வாகிகளிடம் ஆர்வமுடன் கூறினார்கள். கழகத் தலைவர் அவர்களது ஆட்சியில் நிறைவேற்றப் பெற்ற திட்டங்களால் தான் தங்கள் வாழ்க்கை மிகச் சிறப்பாக இருந்தது என்பதை அவர்கள் நெகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தென்காசி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன், முன்னாள் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், கழக வர்த்தகர் அணி துணை செயலாளருமான முத்து செல்வி, கழக ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, சிவன் பாண்டியன், சிவகுமார், சமுத்திர பாண்டியன், மணிகண்டனின் ஆலங்குளம் பேரூர் கழகச் செயலாளர் நெல்சன், முக்கூடல் பேரூர் கழக செயலாளர் ஆர்.லட்சுமணன், விருதுநகர் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் எஸ். எஸ்.கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குமாரவாடி ஊராட்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவுறுத்தலின்படி ஊராட்சி மன்றத் தலைவர் எம்.கண்ணன், துணைத் தலைவர் வி.முருகன் தலைமையில் எம்.ஜி.ஆர். தெருவில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.